செய்தி வெளியீடு எண்:364 நாள் : 19.07.2016

செய்திக் குறிப்பு

துபாய் நாட்டிலுள்ள மருத்துவப் பணி மற்றும் அவசர முதலுதவி ஊர்தி (Ambulance) சேவை நிறுவனத்திற்கு பிஎஸ்சி தேர்ச்சியுடன் 3 வருட அனுபமுள்ள எமர்ஜென்சி மற்றும் டிராமா கேர் பிரிவில் அனுபவமுள்ள பெண் செவிலியர்கள் தேவைப்படுகிறார்கள். செல்லத்தக்க ஏசிஎல்எஸ் (Advanced Cardio Life Support), பிஏஎல்எஸ் (Pediatrice Advanced Life Support), ஐடிஎல்எஸ் (International Trauma Support) சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு கல்வி மற்றும் அனுபவத்திற்குட்பட்டு ரூ.90,000/- முதல் ரூ.1,00,000/- வரை ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், இருப்பிடம் மற்றும் அந்நாட்டின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகளும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு உரிய தகுதி மற்றும் விருப்பமிருப்பின், தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட். மற்றும் ஒரு புகைப்படத்தினை ovemclsn@gmail.com என்ற ஈமெயில் வாயிலாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களை அறிய 044-22505886/22502267/22500417/8220634389 என்ற தொலைபேசி எண்களில் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண்.RC No. BN-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84 ஆகும்.

நிர்வாக இயக்குநர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9